ஜெ.எல்எண் : 866 25/11/09

## செய்தி வெளியீடு

2010 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23 முதல் 27ஆம் நாள் வரை 5 நாட்களுக்கு கோவை மாநகரில் நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு தொடர்பான பல்வேறு பணிகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தவும், துரிதப்படுத்தவும், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழு அமைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள். அதன்படி அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முதல் கூட்டம் 25.11.2009 அன்று மாலை 5 மணிக்கு தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

2. இக்கூட்டத்தில் நிதித் துறை, உயர்கல்வித் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைகளின் முதன்மைச் செயலாளர்களும், பொதுத் துறை, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை ஆகியவற்றின் செயலாளர்களும், தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம், காவல் துறை இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் இயக்குநர், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை மாநகர காவல் துறை ஆணையர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளர் மற்றும்

கோவையிலுள்ள சிறப்புப் பணி அலுவலர் மற்றும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

3. இக்கூட்டத்தில் மாநாடு நடைபெறவுள்ள கொடிசியா அரங்கில் மேற்கொள்ளவேண்டிய மேம்பாட்டுப் பணிகள், இணைப்புச் சாலை வசதி மற்றும் மாநகரை இணைக்கும் நெடுஞ்சாலைத் துறையின் சாலைகள் மற்றும் மாநகரச் சாலைகளை சீரமைத்தல், மின் விநியோக மேம்பாடு தொடர்பாக ஆலோசனை செய்யப்பட்டதுடன், போக்குவரத்து ஒழுங்குபடுத்துதல், சிறப்பு பேருந்து மற்றும் சிறப்பு இரயில்கள் இயக்குதல் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

(கா. அலாவுதீன்)
தனி அலுவலர், உலகத் தமிழ்ச்
செம்மொழி மாநாடு மற்றும்
அலுவல் சார் முதன்மைச் செயலாளர்
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்
மற்றும் செய்தித் துறை

2/2

25/7/09